செய்தி வெளியீடு எண்.426 நாள் **13.11.2006**

# செய்தி வெளியீடு

**2006 மே மாதம் மேதகு ஆளுநர் அவர்கள் சட்டமன்றத்தில் உரையாற்றியபோது – தொழிற் கல்வி படிப்புகளுக்கான பொது நுழைவுத் தேர்வு மாணவர்களுக்கு மிகுந்த மன உளைச்சலை தரக் கூடியதாகவும் அதிகப் பொருட் செலவை ஏற்படுத்துவதாகவும் உள்ளது என்பதாலும்; கிராமப்புற மாணவர்கள் மற்றும் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு நுழைவுத் தேர்வில் சம வாய்ப்பு இல்லை என்ற நிலை இருப்பதாலும்; நுழைவுத் தேர்வினை ரத்து செய்வது குறித்து ஆராய்ந்து பரிந்துரை செய்ய ஒரு வல்லுநர் குழு அமைக்கப்படும் – என்று அறிவிக்கப்பட்டது.**

**அதனைத் தொடர்ந்து 7.7.2006 அன்று அண்ணா பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் டாக்டர் எம்.ஆனந்தகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் இது குறித்து ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்க ஒரு வல்லுநர் குழு அமைக்கப்பட்டது.**

**வல்லுநர் குழு இன்று (13.11.2006) பரிந்துரைகளை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் அளித்தது. நுழைவுத் தேர்வு ரத்து செய்யப்படலாம் என்ற வல்லுநர் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதற்கான வழிமுறைகளை அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதித்து டிசம்பர் 4 அன்று தொடங்கப்படும் சட்டமன்றக் கூட்டத் தொடரில் உரிய சட்ட முன் வடிவினைக் கொண்டு வந்து அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.**

**வெளியீடு:– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**